# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● ஜூலை 1, 2017 | Weekly E-paper ● July 1, 2017


# எதையும் யாரையும் எதிர்கொள்வேன்

## தளபதி அறைகூவல்

**சுப. வீரபாண்டியன்**





தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நடந்த விவாத நிகழ்ச்சி சம்பந்தமான சர்ச்சையினையடுத்து, நடிகரும் நண்பருமான எஸ்.வி.சேகர் அவர்கள் என்னிடம் அலைபேசியில் பேசினார். சட்டமன்ற நிகழ்வுகளில் பங்கேற்றிருந்த நிலையில், "நீங்கள் சொல்வதைக் கவனிக்கிறேன்" எனத் தெரிவித்து, அது பற்றிக் கவனம் செலுத்துமாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி எம்.பி. அவர்களிடம் தெரிவித்தேன். சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் நடைபெற்று வந்தநிலையில், மக்கள் பிரச்சினைகளில் தொடர்ந்து கருத்தைச் செலுத்திட வேண்டிய அவசரமும் அவசியமும் ஏற்பட்டதால், இது குறித்து உடனடியாகக் கவனம் செலுத்த நேரமோ வாய்ப்போ நேர்ந்திடவில்லை. டி.வி. விவாதம் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் கழகத்தின் சார்பில் பங்கேற்கவிருந்த உறுப்பினரும் எனது கருத்தினை அறிந்தபின் பங்கேற்கலாம் என்பதால் அந்த நிகழ்வைக் கடமை உணர்வோடு தவிர்த்திருக்கிறார்.

இதன் தொடர்ச்சியாக,தனிமனித நட்புக்கு அரசியல் வண்ணம் பூசப்பட்டு,சமூக ஊடகங்களில் விமர்சனங்களாகி வருவதை பின்னர் அறிந்தேன். நூறாண்டு காலத் திராவிட இயக்கம், எந்த சமூக நீதிக் கொள்கையையும் சமநீதியையும் சமத்துவத்தையும் முன்வைத்துப் பாடுபடுகிறதோ அந்தக் கொள்கைகளுக்கு குன்றிமணி அளவிலும் குந்தகம் ஏற்படாத வகையிலும் பகுத்தறிவுடனும் சுயமரியாதையுடனும் தி.மு.க. தொடர்ந்து செயல்படும் என்பதில் எவருக்கும் எள்ளளவும் சந்தேகம் ஏற்பட வேண்டியதில்லை. தந்தை பெரியாருக்கு மூதறிஞர் ராஜாஜியுடனும் நட்பு உண்டு, தவத்திரு குன்றக்குடி அடிகளாருடனும் நட்பு உண்டு. அதற்காகத் தனது கொள்கைகளை எப்போதும் அவர் விட்டுத் தந்ததில்லை. அதுபோலவே பேரறிஞர் அண்ணாவும், தலைவர் கலைஞர் அவர்களும் தனிப்பட்ட முறையில் பலருடனும் நட்பு பாராட்டினாலும் கொள்கைகளில் கொண்டிருந்த உறுதியை எதற்காகவும் தளர்த்தியதில்லை. அவர்களின் வழியில் இந்தப் பேரியக்கத்தின் செயல்தலைவர் என்ற பொறுப்பில் உள்ள நான், எந்தச் சூழலிலும் திராவிட இயக்கத்தின் உயிர் மூச்சான கொள்கைகளை உயர்த்திப் பிடிப்பேன். அதற்காக எதையும் யாரையும் எதிர்கொள்வேன். யாரிடமும் எனக்குத் தனி மனித விரோதமில்லை; பேதமுமில்லை. அதேநேரத்தில், தனிப்பட்ட நட்புக்காக, திராவிட இயக்கக் கொள்கைகளை விட்டுக் கொடுப்பது, சமரசம் செய்து கொள்வது என்ற பேச்சுக்கே இடமில்லை. திராவிட இயக்கத்தை அசைத்துப் பார்க்க எந்தக் கொம்பனாலும் எந்தத் தருணத்திலும் முடியவே முடியாது என்பதே எனது உறுதியான நிலைப்பாடு. ●

### போர்ப்படைத் தளபதி

திராவிட இயக்கத்தின் அரசியல் விழுதாக வேரூன்றி நிற்கிறார் தளபதி என்பதை எனக்கு உணர்த்திய தருணம் இது. என்னைப் போன்றவர்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கையைத் தந்திருக்கிறார் செயல் தலைவர். கோபாலபுரத்தின் குரோட்டன்ஸ் செடியன்று. அறிவாலயத்தின் போர்ப்படைத் தளபதி எங்கள் ஸ்டாலின் என்ற உண்மையை உலகிற்கு உணர்த்த அருமையானதொரு வாய்ப்பை உருவாக்கித் தந்த ஒரே காரணத்திற்காக. சாதிக்கும் மதத்திற்கும் பிறந்த எஸ்.வி.சேகரை மன்னிப்பதோடு நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

– **இரா.உமா**

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## தோழர் சுபவீ பங்கேற்ற நிகழ்ச்சிகள்



**25**.06.2017 அன்று காலை, சிவகங்கை மாவட்டத் திராவிடர் கழகத் துனைச் செயலாளர் குணாஹாசன் மகள் திருமணம் தோழர் சுபவீ தலைமையில், காளையார் கோயிலில் நடைபெற்றது. சேங்கை மாறன், திராவிடமணி, இன்பலாதன், பிராட்லா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.



**சி**வகங்கை மாவட்டம், இளையான்குடியில் 26.06.2017 மாலை நடைபெற்ற திமுக பொதுக்கூட்டத்தில், மாவட்டச் செயலாளர் பெரியகருப்பன், முன்னாள் அமைச்சர் தென்னவன், சுபவீ ஆகியோர் உரையாற்றினர்.



**பு**துக்கோட்டை நகரில், 25.06.2017 மாலை நடைபெற்ற திமுக பொதுக்கூட்டத்தில் தோழர் சுபவீ உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் பெரியண்ணன் அரசு, முன்னாள் அமைச்சர் ரகுபதி, வர்த்தக அணிச் செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்ககம், நகரச் செயலாளர் நயினா முகமது ஆகியோர் பங்கேற்றனர்.



**கூ**ட்டத்தில் பார்வையாளர்களில் ஒரு பகுதி.

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## சொல் ஒன்று செயல் வேறு

**சா**த்தான் வேதம் ஓதுகிறது என்பார்கள். அப்படித்தான் இருக்கிறது மோடியின் பேச்சு.

குஜராத் சபர்மதி ஆசிரம நிகழ்ச்சி ஒன்றில் ‘‘பசுப் பாதுகாப்பு என்ற பெயரில் மக்கள் படுகொலை செய்யப்படுவதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று பேசியிருக்கிறார் மோடி.

மோடி தலைமையிலான பா.ஜ.க ஆட்சியில்தான் பசு புனிதம் என்ற பெயரில் தலித்துகள், இஸ்லாமியர்கள், சிறுபான்மையினர் தொடர்ந்து தாக்குதலுக்கும், உயிரிழப்பிற்கும் ஆளாகிக் கொண்டு இருக்கிறார்கள்.

தாத்திரி என்ற ஊரில் முகமது அல்லக் என்பவர் பசுப் பாதுகாப்புக் கும்பலால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

அதற்கு மோடி ‘‘இது துயரமான சம்பவம்’’ என்று காலம் தாழ்த்திச் சொன்னார். கூடவே போலி மதச்சார்பின்மையை பா.ஜ.க. எப்போதும் எதிர்த்து வந்திருக்கிறது என்றும் விவாதங்கள் மூலம் இதைத் தீர்க்க முடியும் என்றும் சொல்கிறார்.

அந்தச் சூழலில் மோடியின் இவ்விரு பேச்சுகளும் முரணாக மட்டுமின்றி ஏனோதானோவாகவும் அமைந்திருந்தன.

தமக்கு எதிராகக் கருத்துச் சொல்பவர்கள் ‘தேசத் துரோகிகள்’ ஆக்கப்பட்டனர்.

ஜெ.என்.யு. மாணவர்கள் சங்கத் தலைவர் கன்னையா குமார் அப்படித்தான் பாட்டியாலா நீதிமன்ற வளாகத்தில் தாக்கப்பட்டார்.

ஓராண்டுக்குப் பிறகு டெல்லிப் பல்கலைக்கழகத்தில் கருத்தரங்கம் நடத்திய மாணவர்கள் மீதும், ஆசிரியர்கள் மீதும் தாக்குதல் நடந்தன. நடத்தியவர்கள் ஏ.பி.வி.பி. அமைப்பினர்.

2016 மார்ச் மாதம் ஜார்கன்டில் கால்நடை வணிகர்களான இரண்டு முஸ்லிம்கள் கொல்லப்பட்டு, மரத்தில் தொங்கவிடப்பட்டனர்.

ஜூலை மாதம் குஜராத் மாநில உனா மாவட்டத்தில் பசுத் தோலை உரித்தார்கள் என்று கூறி 7 தலித்துகள் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள்.

இராஜஸ்தான் மாநிலத்தில் தமிழக அரசு அதிகாரிகள் உரிய ஆவணங்களுடன் மாடுகளைத் தமிழகத்திற்கு கொண்டு வந்த போது ‘பசுப் பாதுகாவலர்’ என்று சொல்லிக்கொள்ளும் கும்பலால் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

அன்மையில் இஸ்லாமியர்களின் முக்கிய ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு 4 முஸ்லிம்கள் புத்துடைகள் வாங்க டெல்லிக்குச் சொன்றுள்ளனார்கள்.

அவர்கள் பயணம் செய்த டெல்லி - மதுரா ரயிலில் அந்த இஸ்லாமியர்கள் மாட்டிறைச்சி சாப்பிடுபவர்கள் என்று சொல்லி மிகக் கொடுமையாகத் தாக்கப்பட்டு, அவர்களில் ஜூனைத் என்ற சிறுவன் கொல்லப்பட்டுள்ளான்.

இப்படி மோடியின் பா.ஜ.க. ஆட்சியின் தொடக்க முதல் இன்று வரை தலித்துகள், இஸ்லாமியர்கள், கிருஸ்துவர்கள், பழங்குடியினத்தவர்கள் தொடர்ந்து தாக்குதலுக்குள்ளாகிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.



இதற்கு மாட்டு அரசியலும் ஒரு காரணமாகிக் கொண்டிருக்கிறது.

இவையெல்லாம் மோடிக்குத் தெரியாமலா இருக்கிறது.

அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் ‘பிரதமர்’ மோடி, வன்முறையாளர்களை அடக்குவதை விட்டுவிட்டு, வன்முறையாளர்களால் ஒடுக்கப்பட்டவர்கள் மீது அனுதாபம் காட்டிக்கொண்டிருக்கிறார்.

இது பிரதமருக்கும் அழகில்லை, நாட்டிற்கும் நல்லதில்லை.

# 2ஜி வழக்கும், சில கணக்கும்

(தேர்தல் வரும்போதெல்லாம் 2ஜி வழக்கு பற்றிப் பேசுவார்கள். இப்போது அந்த வழக்கின் தீர்ப்பே இம்மாதம் வெளிவரவுள்ளது. எனவே இந்த நேரத்தில், முன்பு தோழர் சுபவீ எழுதிய கட்டுரையை மீண்டும் வெளியிடுகின்றோம்)

2ஜி வழக்கு பற்றிப் பேசுகின்றவர்கள் மிகுதி. அந்த வழக்கு பற்றிய உண்மைகள் அறிந்தவர்கள் சிலர், மிக மிகச் சிலர். 2ஜி பற்றி நெடு நேரம் பேசுகின்றவர்களிடம் ஒரே ஒரு சின்னக் கேள்வியை முன்வையுங்கள். அவர்களின் அறியாமையை நாம் அறிந்து கொள்ளலாம். வேறொன்றுமில்லை, 1.76 லட்சம் கோடி என்று தொடர்ந்து இந்த வழக்கில் ஒரு தொகை பேசப்படுகிறதே அது எப்படி வந்தது என்று மட்டும் கேளுங்கள். அடுத்ததாக, அந்தத் தொகை அந்த வழக்கின் குற்றப் பத்திரிகையில் எங்கும் காணப்பட வில்லையே ஏன் என்று கேளுங்கள். இந்த இரண்டு கேள்விகளுக்கும் விடை தெரியாதவர்கள்தாம் 2ஜி பற்றி நிறையப் பேசிக் கொண்டுள்ளனர்.

அந்த உண்மைகளைச் சின்னக் கணக்குகளின் மூலம் நாம் பார்த்து விடுவோம். ஆ. ராசா அவர்கள் மத்திய அமைச்சராக இருந்தபோது, இரண்டாம் தலைமுறை (2ஜி) அலைக்கற்றைகள் விற்பனைக்குக் கொடுக்கப்பட்டன. இன்றிருப்பது போல் அன்று பலரிடம் கைத்தொலைபேசி இல்லை. எனவே 52.75 மெகா ஹெட்ஸ் அலைக்கற்றைகள் மட்டுமே விலை போயின. ஒரு மெகா ஹெட்ஸ் 276 கோடிக்குப் போயிற்று. அதன்மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானம் 14,559 கோடி.

தலைமைத் தணிக்கைக் கணக்காளராக அன்று இருந்த வினோத் ராய் கற்பனையில் ஒரு கணக்குப் போட்டார். அவர் 2008 முதல் 2013வரை அப்பதவியில் இருந்தார். 'முதலில் வருபவருக்கு முதலில்' என்று இல்லாமல் அலைக்கற்றைகளை ஏலத்துக்கு விட்டிருந்தால் ஒரு மெகா ஹெட்ஸ் 3350 கோடிக்கு விற்பனையாகி இருக்கும் என்பது அவர் கணக்கு. அது அவருடைய கற்பனைக் கணக்கு. அதன்படி பார்த்தால், 1,76,712 கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கும் என்றாகிறது. போனால் போகிறது என்று 712 கோடியை விட்டுவிட்டு ஒரு லட்சத்து 76 ஆயிரம் கோடி என்று திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டுள்ளனர். இப்படித்தான் அந்த 1.76 என்னும் தொகை வந்தது.

இங்கும் கூட இரண்டு செய்திகள் கவனிக்கப்பட வேண்டியவை. வினோத் ராய் கணக்குப் படியும் அது ஊழல் அன்று, அரசுக்கான இழப்புத் தொகை. அவ்வளவே. இரண்டாவது, 1.76 இல் வரப்பெற்ற 14ஆயிரம் கோடியைக் கழிக்க வேண்டும் இல்லையா? அதனைக் கழித்துவிட்டு 1.62 லட்சம் கோடி என்றாவது சொல்லியிருக்க வேண்டும்.

இந்த வழக்கில் ஆ. ராசா, 2011 பிப்ரவரி 2 ஆம் நாள் கைது செய்யப்பட்டார். அதாவது, தேர்தலுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு! 2011 ஏப்ரல் 2 ஆம் தேதி குற்றப்பத்திரிகை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் 1.76 லட்சம் கோடி என்ற தொகை எங்கும் குறிக்கப்படவில்லை. தணிக்கையாளரின் கணக்கை சி.பி.அய் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் ஒரு கணக்குப் போட்டு 32 ஆயிரம் கோடி அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கலாம் என்றனர்.

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் 2ஜி மற்றும் 3ஜி அலைக்கற்றைகள், அன்று தணிக்கையாளர் கூறியது போல் ஏலத்துக்கே விடப்பட்டன. 2008ஆம் ஆண்டே ஒரு மெகா ஹெட்ஸ் 3350கோடிக்கு விற்றிருக்க வேண்டுமென்றால், 6 ஆண்டுகளுக்குப் பின் எவ்வளவு கோடி ரூபாய் கூடுதலாக விற்பனை ஆகியிருக்க வேண்டும்? ஆனால் 340.2 மெகா ஹெட்ஸ் அலைக்கற்றை ஒரு லட்சத்து ஓராயிரம் கோடி ரூபாய்க்குத்தான் ஏலம் போனது. அதாவது ஒரு மெகா ஹெட்ஸ் 297 கோடி ரூபாய். அவ்வளவுதான்.

ஏலத்துக்கு விட்டும், 6 ஆண்டுகளுக்குப் பின் ஒரு மெகா ஹெட்ஸ் 21 கோடி ரூபாய்தான் கூடுதல் விலைக்குப் போயுள்ளது. வினோத் ராய் கணக்குப்படி 3350 கோடிக்கே விற்பனை ஆகியிருந்தால் கூட, 11 லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் அரசுக்கு வந்திருக்க வேண்டும் ஆனால் வந்ததோ வெறும் ஒரு லட்சத்து ஓர் ஆயிரம் கோடிதான். அப்படியானால் இப்போது 10 லட்சம் கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளது என்று கூறலாமா?மோடி உட்பட எல்லோரையும் கைது செய்யலாமா?



இந்திய அரசமைப்புச் சட்டம் 148(4) விதியின்படி தலைமைத் தணிக்கைக் கணக்காளர் (CAG) போன்ற மிக உயர்ந்த பதவியில் இருந்தவர்கள் ஓய்வு பெற்றபின் வேறு அரசு பதவிகளில் அமர்த்தப்படக் கூடாது. ஆனால் இப்போது ஓய்வு பெற்றபின், வினோத் ராய், இன்னொரு பெரிய பொறுப்பில் (UN panel of external auditors and honorary advisor to the railways) அமர்த்தப்பட்டுள்ளார்.

புரிய வேண்டிய கணக்குகள் இப்போது புரிந்திருக்கும்! ●

## வரலாற்றுத் திரிபுகள்


1967 தமிழகச் சட்டமன்றத் தேர்தலில், "சாணக்கியர், ராஜதந்திரி" ராஜாஜி ஆதரித்த காரணத்தால்தான் திமுக கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது என்று இப்போது சிலர் கூறத் தொடங்கியுள்ளனர். கூட்டணிக் கட்சிகளின் வலிமையையும், ஆதரவையும் எப்போதும் குறைத்து மதிப்பிடக் கூடாது. அதே வேளையில் அவர்களாலதான் வெற்றி கிட்டியது என்று திரித்துக் கூறவும் கூடாது.

அந்தத் தேர்தலில், திமுக தலைமையில் ஏழு கட்சிகள் கூட்டணியில் இடம் பெற்றன. மார்க்சிஸ்ட் கட்சி, சுதந்திரா கட்சி, முஸ்லீம் லீக், பார்வர்ட் பிளாக், தமிழரசு கழகம், நாம் தமிழர் கட்சி, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி ஆகியன கூட்டணியில் இடம் பெற்றவை. திமு கழகம் 174 இடங்களில் போட்டியிட்டது. சுதந்திரா கட்சிக்கும், பார்வர்ட் பிளாக் கட்சிக்குமாகச் சேர்த்து 28 இடங்களும், மார்க்சிஸ்ட் கட்சிக்கு 22 இடங்களும் அளிக்கப்பட்டன. காலமெல்லாம் திமுக வை எதிர்த்த, நாம் தமிழர் கட்சித் தலைவர் ஆதித்தனாரும், தமிழரசு கழகத் தலைவர் ம.பொ.சி.யும் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டனர்.

174 இடங்களில் போட்டியிட்ட திமுக 138 இடங்களில் வெற்றிபெற்றுத் தனித்து ஆட்சி அமைத்தது. நாடாளுமன்றத் தேர்தலில் தான் போட்டியிட்ட 25 இடங்களிலும் திமுக வெற்றி பெற்றது. சுதந்திரா கட்சி, பார்வர்ட் பிளாக் இரண்டும் சேர்ந்து 20 இடங்களில் வென்றன. இதுதான் வரலாறு.

யாரால் யார் வெற்றி பெற்றனர் என்பதை நாடு சொல்லட்டும்!

(சான்று: ஆர். முத்துக்குமார் எழுதியுள்ள "இந்தியத் தேர்தல் வரலாறு)



## நல்ல நண்பரை இழந்தோம்!



தமிழர் தேசிய இயக்கத்தின் பொதுச்செயலாளரும், அய்யா நெடுமாறன் அவர்களின் பல்லாண்டு காலத் துணைவருமான கா. பரந்தாமன் அவர்கள் 29.06.2017 அன்று மதியம் மாரடைப்பால் மதுரையில் காலமானார்.

அவரும், நானும் 2002-03 இல், பொடா சட்டத்தின் கீழ்ச் சென்னை சிறையில் ஓராண்டிற்கு மேல் ஒன்றாக இருந்தோம். நண்பர்கள் சாகுல் அமீது, மருத்துவர் தாயப்பன் ஆகியோரும் அதே சட்டத்தின் கீழ் எங்களுடன் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

எங்கள் இருவருக்குள்ளும் கருத்து வேறுபாடுகள் நிறையவே இருந்தன. எனினும், தமிழ்த் தேசியம், பகுத்தறிவு ஆகிய சிந்தனைகளில் ஒன்றாகவே இருந்தோம். சிறைச்சாலை, பல நேரங்களில் படிப்பு வட்டமாகவும், விவாத அரங்காகவும் இருந்தது.

2006இல் நான், தமிழர் தேசிய இயக்கத்தை விட்டு வெளியேறிய பின்பும், இருவருக்குமிடையிலான நட்பு அதே அன்புடன் தொடர்ந்தது. மிக அன்பான மனிதர் அவர். எதிர்பாராத அதிர்ச்சிச் செய்தியாக அவருடைய மரணச் செய்தி நம்மை எட்டியுள்ளது.

அவர் குடும்பத்தினர் மற்றும் தமிழ்த் தேசிய இயக்க நண்பர்களுடன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை துயரத்தைப் பகிர்ந்து கொள்கின்றது.

# மறக்க முடியுமா?

## ஆய்வுப் பேரறிஞர்
# தி.வை.சதாசிவப் பண்டாரத்தார்

எழில்.இளங்கோவன்

தி.வை.சதாசிவப் பண்டாரத்தார்! யார் இவர்?

"வட இந்தியாவின் வரலாறே இந்தியாவின் வரலாறு. தென்னாட்டின் சரித்திர உண்மைகளைக் கைவிட்ட காலம். அந்த நாளில் கல்வெட்டுகளின் துணைகொண்டு, (தென்னாட்டு) வரலாறுகளைத் தொடர்ந்து எழுதத் தொடங்கியவர் சதாசிவப்பண்டாரத்தார்"

அறிஞர் மு.அண்ணாமலையின் அறிமுகம் இது.

அந்தக் காலங்களில் வரலாறுகளை ஆங்கிலத்தில் எழுதுவார்கள். தமிழில் வரலாறுகள் மிகக் குறைவாகவே இருந்தன. அதனை உடைத்துத் தமிழில் வரலாறுகளைத் தொடர்ந்து எழுதியவர்களுள் முதன்மையானவர் தி.வை. சதாசிவப் பண்டாரத்தார். குறிப்பாக அவரின் கல்வெட்டுச் சான்றுகளும், செப்பேட்டுச் சான்றுகளும் மிக நுட்பமானவை.

1956ஆம் ஆண்டு மதுரை திருவள்ளுவர் கழகம் அவரை 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' விருது வழங்கியது.

ஆராய்ச்சிப் பேரறிஞர் சதாசிவப் பண்டாரத்தார் 1892ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாள், கும்பகோணம் அருகில் திருப்புறம்பியத்தில் பிறந்தார்.

இவர் குடந்தை நகர உயர்நிலைப் பள்ளியில் 10ஆம் வகுப்பு வரை படித்தார். இவருக்குள் இருந்த தமிழ் வேட்கையால், இவரின் தமிழாசிரியரிடம் முனைந்து தமிழ் பயின்றார்.

தொடக்கத்தில் பாபநாசம் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒன்றரை ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் அதை விடுத்துத் தான் பயின்ற குடந்தை நகர உயர்நிலைப்பள்ளியில் 1 மாதம் தமிழசிரியராகப் பணியாற்றினார்.

1917 முதல் 1942 வரை குடந்தை பானாதுறை உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர்.

1942 முதல் 1953 வரையும், 1955 முதல் 1960 வரையும்(தன் மரணம் வரை) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழாரச்சி துறையில் ஆய்வுப் பணிகளை திறம்பட ஆற்றியவர் பண்டாரத்தார்.

இவர் தன் ஆசிரியர் வலம்புரி அ.பாலசுப்பிரமணியத்துடன் இணைந்து 'சைவ சிகாமணி இருவர்' என்ற நூலை எழுதியிருந்தாலும், இவர் தனித்து எழுதிய முதல் நூல் 'முதலாம் குலோத்துங்கன்'. வெளிவந்த ஆண்டு 1930.

இவரின் தமிழ் இலக்கிய – இலக்கணப் புலமையும், பல்வேறு கோயில்கள், மடங்கள் தோறும் சென்று கல்வெட்டுகள், செப்பேடுகள், சுவடிகளை ஆய்வுசெய்த அரும்பணியால் – பிற்காலச் சோழர் சரித்திரம் (மூன்று பாகங்கள்) – பாண்டியர் வரலாறு – காவிரி பூம்பட்டினம் – திருப்புறம்பியத் தல வரலாறு – தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி.250 – 600) – தமிழ் இலக்கிய வரலாறு (13, 14, 15ஆம் நூற்றாண்டுகள்) – தொல்காப்பியம் பொதுப்பாயிரம் மூலமும் உரையும் போன்ற நூல்களை எழுதியிருக்கிறார்.

அக்காலத்தில் தலை சிறந்த இலக்கிய இதழ்களான செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில், செந்தமிழ் போன்ற இதழ்களில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதியவர் சதாசிவப் பண்டாரத்தார்.

'சோழர் வரலாறு' ஆங்கில நூலை எழுதிய நீலகண்ட சாஸ்திரியார், தேவாரம் பாடியவர்களுள் ஒருவரான சுந்தரரின் காலம் 9ஆம் நூற்றாண்டு என்று சொன்னார்.

அதை மறுத்த பண்டாரத்தார் சுந்தரர் 7ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் எனச் சான்றுகளுடன் கூறினார்.

தேவாரப் பதிகங்களைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி முதலாம் குலோத்துங்கன் காலத்தைச் சேர்ந்தவர் என்ற வாதத்தை மறுத்து, அவர் ஆதித்தன் காலத்தை சேர்ந்தவர் என்பதை நிலைநாட்டினார்.

சேக்கிழார் இரண்டாம் குலேத்துங்கன் காலத்தைச் சேர்ந்தவர் என்பதை ஏற்க மறுத்த பண்டாரத்தார், அவர் மூன்றாம் குலேத்துங்கன் காலத்தைச் சேர்ந்தவர் என்று சான்றுகளை முன் வைத்தார்.

முதலாம் இராசராசனின் அண்ணன் ஆதித்த சோழனைக் கொன்றவர் மதுராந்தகன் என்ற உத்தமச் சோழன் என்ற வாதத்தை முற்றாக நிராகரித்தார்.

ஆதித்த சோழனை வஞ்சகத்தால் கொன்றவர்கள் பார்ப்பனர்கள் என்பதை உடையார் குடிக் கல்வெட்டு மூலம் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தார்.

சோழன் ஒருவன் தன் தந்தை கட்டிய கோயிலுக்காக ஆயிரம் பார்ப்பனர்களுக்கு உணவளித்தான் என்றார் நீலகண்டசாஸ்திரியார்.

அது தவறு, 200 பார்ப்பனர்கள், 300 சிவாச்சாரியார்கள், பல்வேறு சமயமக்கள் 500 பேர்கள் அந்த உணவு விருந்தில் கலந்துகொண்டனர் என்றார் பண்டாரத்தார்.

'இலக்கியமும் கல்வெட்டும்' என்ற நூலில் திருப்பாலைப் பந்தல் உலா, இறைசைப் புராணம், ஓங்கு கோயில் புராணம் ஆகிய நூல்கள் இருந்ததாகக் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது என்றும், அந்த நூல்களை இக்காலத்தில் காண முடியவில்லை என்றும் வருந்துகிறார்.

இதில் 'இறைசைப் புராணம்' என்ற இறைவாச நல்லூர் பற்றிய புராண வரலாற்று நூலை எழுதியவர் நைனார் சந்திரசேகர புலவர் என்பதை உறுதிப்படுத்த திருக்கோவலூர் எலவானாசூர் கல்வெட்டை முன்வைக்கிறார்.



பல்லவ மன்னன் மகேந்திர வர்மன் திருச்சிராப்பள்ளி மலையில் 'இலலிதாங்குர பல்லவேசுவர கிரகம்' என்ற ஒரு குடவரையை உருவாக்கியிருந்தான்.

பின் வந்த காலத்தில் இக்குடவறையில் 'சிராமலை அந்தாதி' என்ற ஒரு முழு நூல் கல்வெட்டுகளால் வெட்டப்பட்டு இருந்துள்ளது.

இக்கல்வெட்டு நூல் 104 பாடல்களைக் கொண்டது. இவை அனைத்தும் கட்டளைக் கலித்துறையால் ஆனவை. இப்பாக்களை எழுதியவர் வேம்பயர்கோன், காலம் கி.பி.9 ஆம் நூற்றாண்டு.

இந்த அரிய பாடல்களை இந்தியத் தொல்லியல் துறையினர் 1888 ஆம் ஆண்டு நகல் எடுத்து அதை 1923ஆம் ஆண்டு வெளியிட்டனர்.

இதைப் பார்த்த பண்டாரத்தார் திருச்சிராப்பள்ளி குடவரை கோயில் கல்வெட்டுகளை ஆய்வு செய்து 1935ஆம் ஆண்டு 'தமிழ்ப்பொழில்' இதழில் ஒரு விரிவான கட்டுரை எழுதினார்.

பண்டாரத்தாரின் இக்கட்டுரையை படித்த மு.இராகவையங்கார் அந்நூலின் மூலம், பொழிப்புரை, விளக்க உரை ஆகிய ஒரு சிறப்பான உரையை எழுதினார்.

தருமபுர ஆதின மடத்தின் வெளியீடாக இந்நூல் அதே 1935ஆம் ஆண்டு வெளிவந்தது.

தந்தை பெரியார், திரு.வி.கல்யாண சுந்தரனார், மறைமலை அடிகளார், நாவலர் சோமசுந்தர பாரதியார், பேராசியர் வையாபுரியார், பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் ஆகியோருடன் செறிந்த நட்புடன் இருந்தார்.

நீதிக்கட்சியால் ஈர்க்கப்பட்டாலும் அக்கட்சியில் இணையாமல், அதன் கருத்துகள், கோட்பாடுகளில் நாட்டமுள்ளவராக இருந்துள்ளார்.

நீதிக்கட்சியின் மாநாடுகள் ஒவ்வொன்றிலும் தவறாமல் இவர் கலந்துக்கொண்டிருக்கிறார் என்ற ஒரு குறிப்பும் இருக்கிறது.

"தமிழ்நாட்டிற்கும், தமிழ் இலக்கியத்திற்கும் நான் செய்ய வேண்டியவை நிறைய இருக்கின்றன என்று நினைக்கிறேன். அந்தத் தொண்டு என்னை மகிழ்வித்து பெரும் துணையாக இருப்பதால் அதில் இருந்து விலகமாட்டேன்" என்று தன் இறுதிக் காலத்தில் சொன்னார்.

ஆய்வுப் பேரறிஞர் தி.வை.சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள், 1960ஆம் ஆண்டு சனவரி திங்கள் 2ஆம் நாள் தன் 68ஆம் வயதில் அனைத்து ஆய்வுகளையும் நிறுத்திக் கொண்டு மரணத்தை தழுவிக்கொண்டார்.●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.